(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 125.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 செத்தெம்பர் 22, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0686/ '10

1.

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 செப்டம்பர் 01ஆம் திகதியன்றுள்ளவாறு, இலங்கை அரசாங்கத்தின் தங்க ஒதுக்கத்தில் மத்திய வங்கியினால் ஏலமிடப்பட்ட தொகை யாதென்பதையும்,

(ii) மேற்படி ஏலத்தில் விடப்பட்ட தங்கத்தின் பெறுமதியை ஐ.அ.டொலர்களிலும் இலங்கை நாணயத்திலும் யாதென்பதையும்,

(iii) அரசாங்கத்தினால் தங்கம் என்ன விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்,

(iv) பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் ஏதேனும் இலங்கை மத்திய வங்கி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தங்கம் ஏதாவது விற்பனை செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், தங்கத்தின் விற்பனை விலை எவ்வளவு என்பதையும்,

(iii) இத்தங்க விற்பனை விலைமனுக்கோரல் மூலமா அல்லது ஏலவிற்பனை மூலமா மேற்கொள்ளப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0985/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபையின், திருகோணமலை துறைமுகத்தில் பாவனைக்கு எடுக்கக்கூடிய ஒரு தொகுதி இரும்பு 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் முதற் பகுதியில் கேள்விப்பத்திர நடைமுறைக்கு புறம்பாக விற்பனை செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின் அந்த ஒரு தொகுதி இரும்பைக் கொள்வனவு செய்த நிறுவனம் அல்லது நபர் யாரென்பதையும்;

(ii) மேற்படி இரும்புத்தொகுதியின் நிறை யாதென்பதையும்;

(iii) மேற்படி இரும்புத் தொகுதியின் விற்பனையிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்குக் கிடைத்த பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விற்பனை செய்யப்பட்ட மேற்படி இரும்புத் தொகுதியை அகற்றும் போது துறைமுகத்தினுள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் நடைமுறைப்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைக்கு இயைபாக செயற்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதனுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இந்தக் கொடுக்கல் வாங்கலில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) அவ்வாறாயின், அதில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

1160/ '11

3.

கௌரவ புத்திக பத்திரண,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் 2005 முதல் 2010 வரையான காலப் பகுதியில் கறுவா பயிர்ச் செய்கை செய்யப்பட்ட காணிகளின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(ii) கறுவாவை புதிதாக பயிர்ச் செய்கை செய்வதற்கும், மீள் பயிர்ச் செய்கை செய்வதற்கும் ஒரு ஹெக்ரயாருக்கு வழங்கப்படுகின்ற மானியத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது கறுவாப் பயிர் செய்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற மானியத் தொகை போதுமானதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் மேற்படி மானியத் தொகையை அதிகரிப்பதற்கு 2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1218/ '11

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1536/ 11

5.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா நகரில் உள்ள வடிகால் முறைமை 40 வருடங்கள் பழமைவாய்ந்தவை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எத்தகைய திருத்தமும் மேற்கொள்ளப்படாமையினால் பழுதடைந்துள்ள இந்த வடிகால் முறைமையிலிருந்து அழுக்கு நீர் வெளியே வடிந்தோடுவதன் காரணமாக வீசுகின்ற துர்நாற்றத்தினால் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(ii) இந் நிலைமை பிரதேச மக்களின் சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) மாவுஸ்சாகெலே நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டபோது நீரில் மூழ்கிய மஸ்கெலிய பழைய நகரத்துக்குப் பதிலாக 1968 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட மஸ்கெலியா புதிய நகரில் உள்ள இந்த வடிகால் முறைமையின் திருத்தப் பணிகளை ஆரம்பிக்குமாறு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கும், உள்ளூராட்சி மன்றத்துக்கும், மாகாண சபைக்கும் பணிப்புரை வழங்குவாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1628/ '11

6.

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களில் மேல்மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட போதிலும் தற்போது வடமத்திய மாகாணத்தில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்திற்கும் அமைவாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் வட மத்திய மாகாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தாம் வதியும் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்காக, இவர்கள் சார்பில் வேறு ஆசிரியர்களை மேற்படி மாகாணத்திற்கு அமர்த்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கஷ்டப் பிரதேச சேவையை நிறைவு செய்த மேற்கூறிய ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை கருத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இதுபோன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இடமாற்றங்கள் வழங்கப்படாத ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள தலையீடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0691/ '10

7.

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்தி வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரையில் இலங்கையில் வர்த்தக வங்கிகளை நிறுவுவதற்கு விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு பிரதான வங்கியின் கீழும் இயங்கும் கிளைகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்,

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வங்கிகளின் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தையும்,

(iv) இன்றுள்ளவாறாக வர்த்தக வங்கிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிடப்பட்ட வங்கிகளுள், இலங்கையில் தலைமையகத்தைக் கொண்டுள்ள எவையேனும் வெளிநாட்டு வங்கியொன்றினை வாங்குவதற்கு பணத்தினை வைப்புச் செய்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவ் வங்கியின் பெயரையும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பணத்தின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வர்த்தக வங்கியல்லாத வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) இலங்கையில் தற்போது இயங்கும் வர்த்தக வங்கியல்லாத வங்கிகளின் எண்ணிக்கையினையும்,

(iii) அவ்வங்கிகளின் பங்கு மூலதனத்தினையும்,

(iv) வர்த்தக வங்கி அல்லது வர்த்தக வங்கி அல்லாத வங்கி ஏதாவது வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அவ்வங்கிகளின் பெயர்களையும் அவற்றின் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0986/ '10

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வித் திணைக்களத்தின் கீழ் காணப்படும் நூல் வெளியீட்டுப் பிரிவினால் 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றில் க.பொ.த. உயர் தர புவியியல் பாடத்திற்கு ஏற்புடையதாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தகைய நூல்களில் சம்பந்தப்பட்ட பாடத்திட்டம் பாடசாலைகளிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் அத்தகைய நூல் அல்லது நூல்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1220/ '11

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வெகுசன ஊடக, தகவல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1273/ '11

10.

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பிற்றபெத்தர பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கதுருவான தேயிலை தொழிற்சாலை ஆறு வருடங்களாக பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) தேசிய வளமொன்றாக உள்ள அத்தொழிற்சாலை பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளதனால் தேசிய பொருளாதாரத்துக்கு பெரும் நட்டம் ஏற்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தேயிலைத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக செலவான மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அது பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தேயிலைத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பித்து பிரதேசத்திலுள்ள தேயிலைப் பயிர்ச் செய்கையாளர்களின் தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு செய்வதற்கான முறைமையியலொன்று வகுக்கப்படுமா என்பதையும்;

(iv) உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமாயின், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1630/ '11

11\.

கௌரவ அனுர திஸாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபைக்கு குத்தகை அடிப்படையில் கொடுப்பனவுகளைச் செய்யும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட பஸ்வண்டிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பஸ் வண்டிகள் வரவழைக்கப்பட்ட திகதிகள் மற்றும், அந்த ஒவ்வொரு திகதியிலும் வரவழைப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரவழைக்கப்பட்ட ஒரு பஸ் வண்டியின் விலை எவ்வளவு என்பதையும்;

(ii) மாதாந்தம் ஒரு பஸ் வண்டிக்கு செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குத்தகை அடிப்படையில் பஸ் வண்டிகளை கொள்வனவு செய்கின்ற போது கேள்விப் பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1221/ '11

12\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சிவில் விமானச் சேவைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1277/ '11

13.

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாணத்தின் பிபில பிரதேச செயலாளர் பிரிவில் ஊராமுலைக்கும் கிழக்கு மாகாணத்தின் பதியதலாவ பிரதேச செயலாளர் பிரிவின் தொரகும்புரவிற்கும் இடையில் அமைந்துள்ள வீதியில் தொரகும்புர பாலம் எனப்படும் இரும்புப் பாலமொன்று உள்ளதென்பதையும்;

(ii) பல வருடங்களாக சிதைவுக்குள்ளாகி பழுதடைந்த நிலையிலுள்ள இப்பாலத்தின் இரும்பு வேலியும் தற்போது உடைந்துள்ளதென்பதையும்;

(iii) இந்நிலைமை காரணமாக இப்பிரதேச மக்கள் தங்களது போக்குவரத்து நடவடிக்கைகளின் போது பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நிலைமையை சீர்செய்வதற்காக இப்பாலத்தை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1307/ '11

14.

கௌரவ.ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில்,

(i) நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு உரித்தல்லாத கட்டிடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதனால் ஏற்படும் மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களின் சதுர அடிக்கான வாடகைப் பெறுமதியையும்;

(iii) கட்டிடங்களுக்கான குத்தகைக்கால அளவையும்;

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஆண்டுகளில்,

(i) அமைச்சின் எந்தவொரு நிறுவனத்திற்கும் உரித்தல்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு அமர்த்தியதில் ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) சொந்தமாக உள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iii) வெளிவளங்களிலிருந்து பெற்றுக்கொண்ட ஏனைய சேவைகளையும்;

(iv) மேற்படி வெளிவளங்களிலிருது பெற்ற சேவைகளுக்கான செலவினத்தையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்;

(vi) மொத்தப் பணியாளர் தொகையையும்;

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) "திவிநகும" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நடுகைப் பொருள் பையின் பெறுமதி யாதென்பதையும்;

(ii) இந் நடுகைப் பொருள் பையில் உள்ளடங்கும் பொருட்கள் மற்றும் அவற்றின் அளவுகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) "திவிநகும" நிகழ்ச்சித் திட்டத்துக்காக ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து பங்குபற்றச் செய்யப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தேசிய பொலிசுக் கலைக்கழகம்,— தேசிய பொலிசுக் கலைக்கழகம் ஒன்றைத் தாபிப்பதற்கும்; தேசிய பொலிசுக் கலைக்கழகத்தின் குறிக்கோளையும் பணிகளையும் இனம் காண்பதற்கும் அதன் முகாமைத்துவத்திற்கும் நிர்வாகத்திற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

---

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 4.

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 7.

ஊழியர் ஒய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

கடல்கடந்த ஊழியர்கள் ஒய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஒய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

19.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**